**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், செங்கல்பட்டு**

**முன்னிலை:-திரு.N.சுல்தான் ஆரிபீன்**, B.Sc., M.A., LL.M., Dip.in JJ& JP

தலைமைக் குற்றவியல் நடுவர், செங்கல்பட்டு

2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் நாள் சனிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி மாதம் 30ஆம் நாள்

**CC.No.640/2026**
**(CNR No.TNCG06-002333-2026)**

தமிழ்நாடு அரசுக்காக,

துணை இயக்குநர்,

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுவலகம்,

விழுப்புரம். ... குற்றமுறையீட்டாளர்.

//எதிர்//

திரு.கணேஷ், வயது 51,

த/பெ.கந்தசாமி,

மேலாளர்,

க்விக் பேட்ஜ் பிரைவேட் லிமிடெட்,

புல எண்கள்.154/6, 7A, 154/7B, 8

உத்திரமேரூர் சாலை, கொடித்தண்டலம் கிராமம்,

நடராஜபுரம், புக்கத்துறை அஞ்சல்,

மதுராந்தகம் வட்டம்,

செங்கல்பட்டு மாவட்டம். ... எதிரி.

**தீர்ப்புரை**

எதிரி ஆஜர். எதிரிக்கு எதிராக குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்த பிரிவு 92 தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987)ன் கீழான வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230 BNSS ன் கீழ் வழங்கி குற்றம் பற்றி வினவ இவ்வழக்கின் எதிரி குற்றத்தினை ஒப்புக் கொண்டார். மீண்டும், எதிரியின் மீது பிரிவு 92

தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987)ன் கீழான குற்றச்சாட்டு குறித்து தமிழில் விளக்கி வினவியபோதும், எதிரி குற்றத்தினை ஒப்புக் கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்தார். அது பரிசீலனைக்கு பின்னர் ஏற்கப்பட்டது.

2. எதிரி தானாக முன்வந்து குற்றத்தை ஒப்புக் கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்து அது பரிசீலனைக்கு பின்னர் ஏற்கப்பட்டுள்ளதையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, எதிரி மேற்கண்ட குற்றத்தை புரிந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. எனவே, எதிரி, பிரிவு 92 தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987)ன் கீழான குற்றம் புரிந்துள்ளார் என்றும், எதிரி குற்றவாளி என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

3. எதிரி குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டதால், எதிரிக்கு பிரிவு 92 தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987)ன் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.25,000/- விதித்தும் கட்டத்தவறினால் 2 வாரம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், பிரிவு 275 BNSS ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N.SULTAN ARIBEEN
Chief Judicial Magistrate, Chengalpattu
Digitally signed by N.SULTAN ARIBEEN
Location: Chengalpattu
Date: 2026.06.13 15:12:08 +0530

தலைமைக் குற்றவியல் நடுவர், செங்கல்பட்டு.

Draft/Fair Judgment

**CC.No.640/2026**

**Dt.13.06.2026**

Chief Judicial Magistrate,
Chengalpattu.